RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# காலம், சமூகம், பெண்: இராஜம் கிருஷ்ணன் இலக்கியத்தின் வரலாற்றுப் பயணம்

**க. சக்திவேல்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-600 005,

# Time, Society, and Woman: The Historical Journey of Rajam Krishnan's Literature

**G. Sakthivel** [a, *]

[a] Department of Tamil, Sangappalagai for Tamil Development, University of Madras, Chennai-600 005

*Corresponding Author: sakthivelganesan17495@gmail.com

Received: 27-12-2025
Revised: 23-02-2026
Accepted: 04-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

Rajam Krishnan occupies a significant place in modern Tamil literature for her sustained engagement with social realities and women's lived experiences. Her literary journey not only reflects the evolution of an individual writer but also documents the transformations that occurred within Tamil society across decades. Family structures, economic conditions, social norms, and women's status undergo notable changes in her works, revealing a historical continuum of women's experiences. This article examines Rajam Krishnan's literary contributions through the interconnected perspectives of time, society, and womanhood. It highlights how women's lives, identities, and struggles evolve in response to socio-historical changes, thereby positioning her writings as important socio-literary documents.

**Keywords:** Rajam Krishnan, Time and Society, Women Representation, Literary History, Tamil Literature

## முன்னுரை

இலக்கியம் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் சமூக, அரசியல், பண்பாட்டு நிலைகளைப் பதிவு செய்யும் வரலாற்று ஆவணமாக விளங்குகிறது. பெண் எழுத்தாளர்களின் படைப்புகள், அந்தக் காலச் சமூகத்தில் பெண்கள் எதிர்கொண்ட வாழ்வியல் அனுபவங்களை நுணுக்கமாக வெளிப்படுத்துகின்றன. தமிழ் நவீன இலக்கியத்தில் இந்தப் பணியைச் சிறப்பாகச் செய்தவர்களில் இராஜம் கிருஷ்ணன் முக்கியமானவர்.

இராஜம் கிருஷ்ணனின் எழுத்துகள் ஒரே கட்டத்தில் நிலைத்தவை அல்ல. காலப்போக்கில் அவரது சிந்தனையும் கருத்துகளும் மாற்றமடைந்து, சமூக மாற்றங்களோடு இணைந்து வளர்ந்துள்ளன. இவ்வாய்வு, அவரது இலக்கியத்தை வரலாற்றுப் பார்வையில் அணுகி, காலம், சமூகம், பெண் என்ற மூன்று கூறுகளின் பரஸ்பர உறவினை ஆராய்கிறது.

## இராஜம் கிருஷ்ணன் - இலக்கியப் பின்னணி

இராஜம் கிருஷ்ணன் தனது எழுத்துலகப் பயணத்தை இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தொடங்கினார். அக்காலக்கட்டத்தில் தமிழ் சமூகத்தில் நிலவிய பாரம்பரிய குடும்ப அமைப்பு, பெண் மீதான கட்டுப்பாடுகள், பொருளாதார சார்புநிலை போன்றவை அவரது ஆரம்பகாலப் படைப்புகள் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. அவரது இலக்கியம் தனிப்பட்ட அனுபவங்களையும் சமூக உண்மைகளையும் இணைக்கும் தன்மை கொண்டதாக விளங்குகிறது.

## காலம் மற்றும் சமூக மாற்றங்கள்

இராஜம் கிருஷ்ணன் படைப்புகளில் காலத்தின் ஓட்டத்துடன் சமூக மாற்றங்கள் தெளிவாகப் பதிவாகின்றன. சுதந்திரத்திற்குப் பிந்தைய சமூக அமைப்பு, நகரமயமாக்கமல், கல்வி வளர்ச்சி, பெண்கள் வேலைவாய்ப்பில் நுழைவு போன்ற மாற்றங்கள் அவரது கதைகளின் பின்னணியாக அமைந்துள்ளன. சமூக மதிப்பீடுகள் மாறும்போது, பெண்களின் வாழ்வியல் அனுபவங்களும் எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதைக் காண முடிகிறது.

“இலக்கியம் படைப்பவர் சாமானிய மக்களை விட்டு விலகி நிற்கும்போது அங்குக கலை மலர்வதற்கில்லை” என்று குறிப்பிடும் இராஜம் கிருஷ்ணன், நாவல் என்பது காலத்தால் உருவான கலைவடிவம் என்பதை நன்கு உணர்ந்தவர். நாற்பதுக்கும் மேற்பட்ட இவருடைய நாவல்களைச் சமூக நாவல்கள், வட்டார நாவல்கள் என்று இரு வகைகளில் அடக்கலாம்.

## சமூக நாவல்கள்

பால் வேறுபாடு, வர்க்கப் போராட்டம், பாலியல் வன்முறை, சிறுவர் சிறுமியர் மீதான வன்முறை, பெண்களின் அடிமை நிலை போன்ற பல பிரச்சினைகளைப் பற்றி இராஜம் கிருஷ்ணன் தன்னுடைய சமூக நாவல்களில் பேசுவதோடு நிற்காமல், அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழியும் காட்டியுள்ளார். காலந்தோறும் பெண்கள் வாழ்ந்த அடிமை வாழ்வைப் பற்றி விளக்கிக் கூறுவதோடு அமையாமல், இருபதாம் நூற்றாண்டில் பெண்கள் கல்வியறிவோடு, தொழிற்கல்வியையும் பெற்று எவ்வாறு விழிப்புணர்வோடு வாழ வேண்டும் என்றும் பல சமூக நாவல்களில் அறிவுறுத்தியுள்ளார். சமுதாயம் சிறப்படைய அவர் கூறும் வழிகள் மூலம் இராஜம் கிருஷ்ணனின் நாட்டுப்பற்றை உணர முடிகிறது.

இராஜம் கிருஷ்ணனின் சமூக நாவல்களில் சேற்றில் மனிதர்கள், கரிப்பு மணிகள், அலைவாய்க் கரையில் ஆகியவை சிறப்பு வாய்ந்தவை. உழைக்கும் வர்க்கத்தின் வாழ்க்கைப் பிரச்சினைகளை இந்நாவல்கள் வெளிப்படுத்துகின்றன.

## பெண் வாழ்க்கை - பாரம்பரியத்திலிருந்து மாற்றம் வரை

ஆரம்பக் கட்ட இராஜம் கிருஷ்ணன் படைப்புகளில் பெண்கள் குடும்ப மையமாக கட்டுப்படுத்தப்பட்ட வாழ்க்கை நடத்துவதாக சித்தரிக்கப்படுகிறார்கள். காலப்போக்கில் அவரது படைப்புகளில் பெண்கள் கல்வி, வேலை, சுய சிந்தனை ஆகியவற்றின் மூலம் தங்கள் அடையாளத்தைத் தேடும் நிலைக்கு நகர்கிறார்கள். இந்த மாற்றம் தமிழ் சமூகத்தில் பெண்களின் வரலாற்றுப் பரிணாமத்தைப் பிரதிபலிக்கிறது.

## குடும்பம், சமூகம் மற்றும் பெண்

இராஜம் கிருஷ்ணன் படைப்புகளில் குடும்பம், பெண்களின் வாழ்வில் மைய இடம் வகிக்கிறது. குடும்பப் பொறுப்புகள், சமூக எதிர்பார்ப்புகள் மற்றும் தனிப்பட்ட ஆசைகள் ஆகியவற்றுக்கிடையிலான மோதல் பெண்களின் அக வாழ்க்கையை வடிவமைக்கிறது. சமூகக் கட்டமைப்புகள் பெண்களின் சுயநிலையை எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன என்பதையும் அவர் விமர்சனமாக வெளிப்படுத்துகிறார்.

## வரலாற்றுப் பார்வையில் இராஜம் கிருஷ்ணன் எழுத்துகள்

இராஜம் கிருஷ்ணன் படைப்புகள் குறிப்பிட்ட காலகட்டத்தின் சமூக வரலாற்றைப் பதிவு செய்யும் இலக்கிய ஆவணங்களாக விளங்குகின்றன. பெண்களின் நிலை, குடும்ப அமைப்பு, பொருளாதார சூழல் போன்றவை அவரது எழுத்துகளில் காலவரிசைப்படி மாறுபட்டு வெளிப்படுகின்றன. இதனால் அவரது இலக்கியம் சமூக வரலாற்று ஆய்விற்கும் முக்கிய ஆதாரமாக அமைகிறது.

## காலம்- சமூகம்- பெண்: ஒருங்கிணைந்த பார்வை

காலம், சமூகம், பெண் என்ற மூன்று கூறுகளும் இராஜம் கிருஷ்ணன் இலக்கியத்தில் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ளன. கால மாற்றங்கள் சமூக அமைப்புகளை மாற்றுகின்றன; சமூக மாற்றங்கள் பெண் அனுபவங்களை மாற்றுகின்றன. இந்த பரஸ்பர உறவினை அவரது படைப்புகள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

## கள ஆய்வும் காலப் பதிவும்

இராஜம் கிருஷ்ணன் ஒரு நாவலை எழுதுவதற்கு முன் களப்பணி செய்யும் இடத்திற்கே சென்று அப்பகுதி மக்களுடன் வாழ்ந்தவர். குறிஞ்சித்தேன்: நீலகிரி படகர் இன மக்களின் வாழ்வியல் மாற்றம். கரிப்பு மணிகள்: தூத்துக்குடி உப்பளத் தொழிலாளர்களின் அவல நிலை. சேற்றில் மனிதர்கள்: தஞ்சை நஞ்சை நில உழைப்பாளர்களின் வாழ்வு. காலம்தோறும் பெண்: சமூக வரலாற்றில் பெண்ணின் நிலை எவ்வாறு வீழ்ச்சியடைந்தது என்ற வரலாற்றுப் பதிவு.

## சமூக விளிம்புநிலை மாந்தர்கள்

பெண் எழுத்து என்பது வெறும் குடும்பச் சிக்கல்களை மட்டும் பேசுவது என்ற எல்லையைத் தகர்த்தவர் ராஜம் கிருஷ்ணன். சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள பெண்களின் உழைப்புச் சுரண்டல் மற்றும் பாலினப் பாகுபாட்டைத் தன் எழுத்தில் கொண்டு வந்தவர்.

## பெண்ணியச் சிந்தனைகள்

ராஜம் கிருஷ்ணன் நாவல்களில் பெண்கள் வெறும் 'தியாக உருவங்களாக' மட்டும் சித்திரிக்கப்படவில்லை. சுழலில் மிதக்கும் தீபங்கள்: பிராமணச் சமூகக் கட்டுப்பாடுகளுக்குள் சிக்கித் தவிக்கும் பெண்ணின் மனப்போராட்டம். ரோஜா இதழ்கள்: அரசியலில் பெண்களின் பங்களிப்பு மற்றும் எதிர்கொள்ளும் சிக்கல்கள்.

## காலம், சமூகம், பெண் பற்றி இராஜம்கிருஷ்ணன்

இராஜம் கிருஷ்ணனின் இலக்கியங்கள் வெறும் கற்பனை அல்ல; அவை அந்தந்தக் காலத்தின் சமூக ஆவணங்கள். பெண் விடுதலை என்பது பொருளாதாரச் சுதந்திரத்துடன், அறிவு சார்ந்த முதிர்ச்சியையும் உள்ளடக்கியது என்பதை வலியுறுத்துகிறார். சாதி, மதம் கடந்த 'மானுடம்' என்ற விழுமியத்தை நோக்கி அவர் சமூகம் நகர வேண்டும் என விரும்புகிறார்.

## முடிவுரை

இராஜம் கிருஷ்ணனின் படைப்புகள் ஒரு பெண் எழுத்தாளரின் தனிப்பட்ட சாதனையை மட்டும் குறிக்கவில்லை, தமிழ் சமூகத்தின் வரலாற்றுப் பயணத்தையும் பதிவு செய்கிறது. காலம், சமூகம், பெண் ஆகியவற்றின் மாற்றங்களை ஒருங்கிணைந்த பார்வையில் வெளிப்படுத்தியதன் மூலம், இராஜம் கிருஷ்ணன் தமிழ் நவீன இலக்கியத்தில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளார்.

## References

Krishnan, Rajam, Kaalandhorum Pen, Thaagam Publications, Chennai, 2011.

Krishnan, Rajam, Karippu Manigal, New Century Book House, Chennai, 2005.

Krishnan, Rajam. Kodugalum Kolangalum (e-book), Kaniyam Foundation.

Rajam Krishnanin Puthinangal, Tamil Virtual Academy.

Sivakami, S. Tamil Naavalgalil Pen Bimbangal, 2002.

Sirpi Balasubramaniam & Neela Padmanabhan, Pudhiya Tamizh Ilakkiya Varalaaru, 2015.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License